
புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • மார்ச் (March)12, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 8 • விலை (PRICE) ரூ.6.00



## பாஜக எங்கள் பண்பாட்டு எதிரி
# காவியை கருப்பு, சிவப்பு விரட்டி அடிக்கும்!



தி.மு.க. என்கிற மாபெரும் இயக்கம், தேர்தல் நேரத்தில் மட்டும் மக்களிடம் வரும் கட்சியல்ல. மக்களின் உரிமைகளுக்காக எப்போதும் களத்தில் நிற்கும் கட்சி. எங்களுக்குத் தெரியும்! தமிழ்நாட்டின், தமிழ் மொழியின், தமிழ்ப் பண்பாட்டின், உண்மையான எதிரி யார்? என்று எங்களுக்கு நன்றாகவே தெரியும். அந்த எதிரியை எதிர்க்கும் தெம்பும், திராணியும் கொண்ட ஒரே இயக்கம் தி.மு.க என்பது மக்களுக்கும் நன்றாகத் தெரியும்!

அ.தி.மு.க. என்கிற முகமூடியை போட்டுக் கொண்டு வந்தால், எங்களுடைய தமிழ்நாட்டு மக்களுக்கு உங்களை அடையாளம் தெரியாமல் போய்விடுமா? உங்களின் முகத்திரையைக் கிழித்து, தமிழ்நாட்டு மக்களிடம் நாங்கள் அம்பலப்படுத்துவோம். தமிழ்நாட்டை எப்படியாவது நம்மிடம் இருந்து, விழுங்கிடலாம் என்று நினைக்கிறது காவிக் கூட்டம். எங்கள் கருப்பு - சிவப்பு பட்டாளம் இருக்கிறவரை அது நடக்கவே நடக்காது. உங்கள் அப்பனே வந்தாலும் நடக்காது. நடக்க விடமாட்டோம். இது அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

அதனால்தான், அ.தி.மு.க. என்ற கட்சியைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்குகிறார்கள். அரசியலில் நேர் எதிராக இருந்தாலும், அ.தி.மு.க தொண்டர்கள் மீது நான் உண்மையாகவே பரிதாபப்படுகிறேன். அவர்களுடைய உணர்வுக்கு மாறாக கட்சியைக் கொண்டு போய் டெல்லியில் அடமானம் வைத்து விட்டார் பழனிசாமி. தன் சொந்த நலனுக்காக, சுய லாபத்துக்காக, எப்படியாவது முதலமைச்சராக ஆக வேண்டும் என்ற நப்பாசையில், பழனிசாமி அடிமையாகக் கிடக் கிறார். அவரை வைத்து, ஒட்டுமொத்த அ.தி.மு.க.வையும் அழிக்கும் வேலையை பா.ஜ.க செய்து கொண்டிருக்கிறது.

இப்போது கூட பீகாரில், என்ன நடக்கிறது என்று நாடே பார்க்கிறதே! பீகார் மாநிலத்தில் இதுவரை பா.ஜ.க. முதலமைச்சர் இருந்ததே கிடையாது. நிதிஷ்குமார் அவர்களை முன்னிறுத்தி தேர்தலில் ஜெயித்துவிட்டு, இப்போது காரியம் ஆனதும் அவரை ஓரங்கட்டிவிட்டு, பா.ஜ.க. முதலமைச்சரை உள்ளே கொண்டு வரப் போகிறார்கள். இதையேதான் தமிழ்நாட்டிலும் செய்யலாம் என்று முயற்சி செய்கிறார்கள்.

நான் அடித்துச் சொல்வேன்! சேலஞ்ச் செய்து சொல்வேன்! இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும், எங்கள் தி.மு.க.வும் இருக்கும் வரை, பா.ஜ.க.வால் தமிழ் நாட்டை ஆள முடியவே முடியாது! நீங்கள் அந்தர் பல்டி அடித்தாலும், என்ன முகமூடி போட்டுக் கொண்டு வந்தாலும், புதிது புதிதாக யாரை அழைத்துக் கொண்டு வந்தாலும், எத்தனை ஏவல் அமைப்பு களை வைத்து மிரட்டிப் பார்த்தாலும், தமிழ்நாடு எப்போதுமே உங்களுக்கு *Out Of Control*-தான்!

நாங்கள் பார்க்காத படையெடுப்பா? தி.மு.க. பார்க்காத மிரட்டலா? நீங்கள் இந்தியா மேப்பில் இருக்கும் எந்த மாநிலத்தின் மீது வேண்டுமானாலும், காவி அடித்திருக்கலாம்! ஆனால், தமிழ்நாட்டில் உங்கள் பாச்சா பலிக்கவே பலிக்காது! இங்கே எப்போதுமே நாங்கள்தான்! எங்கள் மண்ணில், நாங்கள்தான் ஜெயிப்போம்! நாங்கள் மட்டும்தான் ஜெயிப்போம்!

**- திருச்சி மாநாட்டில் முதல்வர் உரை..**

# 1971-ஆம் ஆண்டு தேர்தல் வரலாற்றுப் பின்னணி

## முதல்வர் மு.க ஸ்டாலின் திருச்சி மாநாட்டு உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

**“இந்த நேரத்தில் தந்தை பெரியார் 1971-ல் சொன்னதை நினைத்துப் பார்க்கிறேன் திமுக ஆட்சி தொடர்ந்தால்தான் தமிழ் சமுதாயம் எதிர்பார்க்கும் முன்னேற்றம் ஏற்படும் என்றார்.**

**"இப்போதும் தந்தை பெரியார் சொன்னதை மனதில் வைத்து நமது பயணத்தை தொடர வேண்டும்" என்று பேசி உள்ளார். முதலமைச்சர் இப்போது 1971 ஆம் ஆண்டை ஏன் நினைவு கூற வேண்டும்? அதற்கு வரலாற்றுப் பின்னணி உண்டு.**

1971 ஆம் ஆண்டு சனவரி 23,24 சேலத்தில் பெரியார் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டை நடத்தினார். கோவை ஜிடி நாயுடு மாநாட்டை திறந்து வைத்தார். மூட நம்பிக்கைகளை தோலுரித்த பகுத்தறிவு மாநாட்டில் திராவிடர் கழக தோழர்கள் மட்டுமே பங்கேற்றனர். வேறு கட்சிகள் அழைக்கப்படவில்லை. இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக மாபெரும் மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நடைபெற்றது. மூடநம்பிக்கைகளை விளக்கும் அலகு குத்துதல், தீச்சட்டி எடுத்தல், ராமன் சீதைகளை கடவுளாக கருதும் நம்பிக்கைகளை தகர்க்கும் அவர்களது புராண ஆபாச பிறப்புகளை சித்தரிக்கும் படங்கள் என்று ஊர்வலத்தில் எடுத்து வரப்பட்டன. இந்தப் பேரணிக்கு தடைகோரி கருப்புக் கொடி போராட்டத்தை ஜனசங்கம் கட்சி அறிவித்தது. அதற்கு காவல்துறை அனுமதி வழங்கி இடமும் ஒதுக்கி தந்தது.

அப்போது ஒரு ஜனசங்க தொண்டர் பேரணியை நோக்கி செருப்பு வீசினார். அப்போது பெரியார் வந்த வாகனம் முன்னே கடந்து சென்றுவிட்டது. ராமர் பட வண்டியில் அந்த செருப்பு வந்து விழுந்தது. வந்து விழுந்த செருப்பை தோழர்கள் ராமனுக்கு எதிராக பயன்படுத்தினர்.

அப்போது நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்ற தேர்தலையும் சேர்த்து நடத்த கலைஞர் முடிவு எடுத்தார். இதற்கு பெரியார் ஆலோசனையையும் கேட்டார். காமராசர் வழமைக்கு மாறாக திமுகவுக்கு எதிராக ராஜகோபால ஆச்சாரியின் ‘சுதந்திரா’ கட்சியுடன் கூட்டணி அமைத்திருந்தார். ‘இந்திரா காங்கிரஸ்’ கட்சியுடன் திமுக கூட்டணி அமைத்தது. சேலம் நிகழ்வுக்கு பிறகு "ராமனை செருப்பால் அடித்த பெரியார் ஆதரிக்கும் திமுக கூட்டணிக்கா ஓட்டு?" என்று பரப்புரையை எதிர்க்கட்சிகள் தொடங்கின. ராமனை பெரியார் செருப்பால் அடிக்கும் படத்துடன் தமிழ்நாடு முழுவதும் சுவரொட்டிகளை ஒட்டினார்கள். சோ தனது “துக்ளக்” பத்திரிகையில் சேலம் ஊர்வலத்தில் எடுத்து வரப்பட்ட படங்களை வெளியிட்டார். மத வெறியைத் தூண்டி விடலாம் என்று அவர் திட்டமிட்டார். “துக்ளக்” பத்திரிக்கையை பறிமுதல் செய்ய தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது.

ஏற்கனவே ராஜாஜி முதல்வராக இருந்த போது ’பிள்ளையார் சிலை உடைப்பு போராட்டம்’ நடந்தது. அப்போது ராஜாஜி திராவிடர் கழகத்தினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று கூறிவிட்டார். ஆனால் அதே ராஜாஜி இப்போது இந்த பிரச்சனையை ஊதி பெருக்கினார். தமிழ்நாடு முழுவதும் சுதந்திரா கட்சி பார்ப்பனர்கள் காங்கிரஸ் உடன்சேர்ந்து கொண்டு பெரியார் படங்களை செருப்பால் அடித்தனர். பெரியார் இதை வரவேற்று எழுதினார். **"பாதி விலையில் தனது படத்தையும் செருப்பையும் அஞ்சலில் அனுப்பி வைக்க தயார்"**. அப்போது தான் எனது கொள்கை பரவும் என்று அறிக்கை விட்டார்.

அப்போது திமுக ஆதரவு ஏடாக வெளிவந்த ‘எரிமலை’ என்னும் நாளேடு பார்ப்பன எதிர்ப்பு உணர்வு அலைகளை தட்டி எழுப்பியது. தத்துவ கவிஞர் குடிஅரசு "மனுதர்மத்திற்கு செருப்படி" என்ற தொடரை எழுதினார். பார்ப்பன சங்கிகளுக்கு சவால் விட்டு சண்டமாருதம் செய்தது ’எரிமலை’. தேர்தல் களம் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் என்ற எரிமலையாக குமுறியது; பார்ப்பன எதிர்ப்பு உணர்வலைகள் நாடுமுழுவதும் கொதிநிலை அடைந்தது. கலைஞர் இந்த பார்ப்பன எதிர்ப்புகளை புறந்தள்ளி விட்டு தேர்தல் களத்தை வடிவமைத்தார். பெரியார் சமரசத்துக்கு தயாராகவில்லை ராமனை செருப்பால் அடித்த செய்தி பெரியாருக்கு தெரியாது என்றாலும், செய்தியாளர்கள் கேட்டபோது "ஆம். அப்படித்தான் அடித்தோம்! செருப்பால் அடிக்காதவர்கள் தங்களின் சூத்திர இழிவை ஏற்றுக் கொள்கிறவர்கள்" என்று அழுத்தமாக பதிவு செய்தார். பெரியார் பெரியாராகவே நின்றார்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்தன. 184 இடங்களை திமுக கைப்பற்றியது. அப்போது கலைஞர் ”சேலத்தில் இரண்டு ராமர்கள் எங்கள் கட்சியில் வெற்றி பெற்று இருக்கிறார்கள். ஒருவர் ராஜாராமன் மற்றொருவர் ஜெயராமன் என்று வெற்றி சிகரத்தை திமுக இதுவரை எட்டவே இல்லை. பெரியார் மகிழ்ந்தார். கலைஞருக்கு உடனடியாக தந்தி கொடுத்தார். அந்த தந்தியில் இவ்வாறு கூறியிருந்தார்.."

**1. எனக்கு பழி நீங்கியது!**
**2. நீங்கள் உலகப்புகழ் பெற்றீர்கள்.**
**3. உங்களைப் பாராட்ட எனக்கு வார்த்தைகள் இல்லை".**

ராமனை செருப்பால் அடித்ததால் திமுக தோல்வியை தழுவி விடுமோ என்று பெரியார் கவலைப்பட்டார். அந்த உணர்வுகளின் வெளிப்பாடுதான் இந்த தந்தியின் வாசகம்.

மறுநாளே கலைஞரும் அமைச்சர்களும் பெரியாரை சந்திக்க திடலுக்கு வந்துவிட்டனர். பெரியாருக்கு மாலை அணிவித்து அண்ணா நினைவிடம் நோக்கி அவரை அழைத்துச் சென்றனர்.

பார்ப்பன சக்திகளுக்கு எதிராக நடந்த இனப் போராட்டம்தான் 1971 -ம் ஆண்டு தேர்தல். அதைத்தான் தமிழக முதல்வர் இப்போது நினைவு கூறுகிறார். 1971 ஆம் ஆண்டு சாதனையை 2026-ல் முதல்வர் முறியடிப்பார். **- இரா**

# ‘அவதார’ ராமனுக்கு அவசர வேண்டுகோள்!

ஓ...**ஸ்ரீராம** பகவானே! இந்து ராஷ்டிரத்தின் காட் ஃபாதரே.. வழிகாட்டியே தத்துவமே..

உங்களை நம்பி வாழும் எங்கள் மோடி ராஜ்ஜியத்துக்கு சோதனைமேல் சோதனை வந்துகொண்டே இருக்கிறதே. உன் ஞானக் கண்களுக்கு தெரிகிறதா? நம்புகிறோம்! நாங்கள் நம்புகிறோம். எல்லாம் அறிந்த உனக்கு நிச்சயமாக இது தெரியாமல் இருக்காது.

எங்கள் மோடிஜியும் எங்கள் அமைச்சர்களும், உனக்கு கோயில் கட்ட உத்தரவிட்ட எங்கள் மோகன் பகவத்தும், சேவக்குகளும் சனாதனிகளும் உனது மகா சக்தியைத் தானே நம்பி இருக்கிறோம்?

நாங்கள் எல்லாம் இப்போது திக்குமுக்காடி அரசியல், பொருளாதார நெருக்கடிகளில் தவிக்கிறோம்! திணருகிறோம். இது உனக்கு தெரியவில்லையா சுவாமி?.



அமெரிக்கா மிரட்டுகிறது; வரி போடுகிறது. ரஷ்யாவிடமிருந்து பெட்ரோல் வாங்காதே என்று ஆணையிடுகிறது. இந்துக்கள் வாழும் நமது புண்ணிய ஆன்மீக பூமியில் ஒரு ரூபாயின் மதிப்பு என்ன தெரியுமா? சொல்வதற்கே வாய் கூசுகிறது. அமெரிக்காகாரன் ஒரு டாலர் கொடுத்தால் அதற்கு நாம் 92 ரூபாயை எண்ணி வைக்க வேண்டும். அய்யகோ அமெரிக்காவின் கிறுத்தவர்களிடம் உலகத்துக்கே கலாச்சாரக் காவலர்களாகிய நாம் இப்படி ‘மதிப்பு’ இழந்து கிடக்கலாமா?.

நாங்கள் டிரம்புக்கு கொடி தூக்கினோம்! இப்போது அந்த மனிதர் இஸ்ரேலுடன் சேர்ந்து ஈரான் மீது படையெடுத்து படுகொலைகளைச் செய்கிறார். 7 வயதிலிருந்து 8 வயது வரை உள்ள 168 குழந்தைகள் துடிதுடிக்க படுகொலை செய்யப்பட்டு விட்டார்கள். நமது மோடிக்கு கண்டனம் தெரிவிக்கக் கூட துணிவு வரவில்லை. கச்சா எண்ணெய் வரவில்லை; சமையல் கேஸ் உற்பத்தி பாதிக்கப்பட்டு விட்டது. ஓட்டல்களும், டீக்கடைகளும் மூடப்பட்டு வருகின்றன. இவ்வளவு நெருக்கடிகளையும் நமது பாரதத்தாய் தாங்கிக் கொள்வாளா?.

**ஸ்ரீராம பகவானே! உனக்கு நாங்கள் என்னய்யா குறைவைச்சோம் என்னய்யா துரோகம் செய்தோம்.**

பிறப்பிட சான்றிதழ் எதுவும் இல்லாமலே உனக்கான பிறப்பிடத்தை நாங்கள் உருவாக்கினோம்; அதற்காகவே பாபர் மசூதியை கரசேவை செய்தோம்; குற்றம் சாட்டப்பட்டவர்களை தண்டனையிலிருந்து தப்பிக்க விட்டோம். உனக்காகவே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை வாங்கினோம். ராமா! நீதானே நேரில் வந்து தீர்ப்பு எழுதினாய்! இதை நீதிபதியே கூறினாரே. மசூதி இடித்த இடத்திலேயே உனக்கு கோயில் கட்டினோமே!

**மகா ராஜாவே! தேசத் தெய்வமே!**

உன் கோயிலுக்கு நாங்கள் செலவிட்ட தொகை எவ்வளவு தெரியுமா ரூ.5000 கோடி; 67 ஏக்கர் அரசு நிலத்தை உனக்காக தானமாக வழங்கினோம். உனது கோயில் கட்டிட வளாகத்திற்காக அப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வீடுகளையும் கடைகளையும் மக்கள் கதறக் கதற இடித்து தள்ளினோம்.

உன் கருணைக்காகவே ஆட்சி நடத்துகிறார் நமது உ.பி முதல்வர். அவர் உனக்காக எவ்வளவு செலவிட்டது தெரியுமா? அயோத்திக்கு சர்வதேச விமான நிலையம்; புதிய தொடர்வண்டி நிலையம்; ராமர் பாதை; பக்தி பாதை; ராமஜென்ம பூமி பாதை என்று அரசு செலவிட்ட தொகை மட்டும் ரூ.30,000 கோடி. **ஸ்ரீராம** பகவான் எங்களை கைவிட மாட்டார் என்ற நம்பிக்கையின் உச்சியிலே நாங்கள் நின்றோம். ஏன் இப்போதும் நிற்கிறோம்.

எங்கள் நிலையை பார்த்தாயா?...ஈரான் இசுலாமிய மக்களிடமும், அமெரிக்க- ரஷ்ய கிறுத்தவர்களிடமும் நாங்கள் சரணடைந்து கிடக்கிறோமே. பெட்ரோல் நெருக்கடிகளாலும், வரி விதிப்புகளாலும் உனது ராமராஜ்யம் சிரிப்பாய் சிரிக்கிறதே!

**சொல்! ஸ்ரீராமா... சொல்!**

இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்? வீடுகளில் விளக்கு ஏற்ற வேண்டுமா? தட்டுகளை எடுத்து தாளம் போட வேண்டுமா? ‘**ஸ்ரீராம** ஜெயம்’ பக்கம் பக்கமாக எழுத வேண்டுமா? இப்படி எந்த உயிர் தியாகங்களுக்கும் நாங்கள் தாயார்.தாயார். தாயார்!.

**உனக்குத் தெரியுமா ராமா?**

நமது மோடிஜி தமிழ்நாட்டில் பேசத் தொடங்கும்போது ஜெய் ஸ்ரீராம் என்ற ஓங்கார கூச்சலுடன் தானே தொடங்குகிறார். அவரது நாடி நரம்புகள் அப்போது துடிப்பதை, புடைப்பதை நீ பார்க்கிறாயா? அப்பப்பா...என்னே எமோசன்! நாம் யார்? உலகம் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய நமது குடி. அந்தக் குடி இப்போது உலக நாடுகளிடம் மண்டியிட்டு கிடக்கிறதே இதை சகிக்க முடியுமா?

**ஸ்ரீராம**னே! கோதண்ட பாணியே! மரியாதை புருஷனே! சீதாபதியே! அயோத்தி ராஜாவே! வா.! உனது பாரத தேசத்தைக் காப்பாற்ற அவதாரம் எடுத்து வா!. அப்படியே இன்னொரு வேண்டுகோள் எங்களது என்.டி.ஏ. கூட்ணியையும்..

இப்படிக்கு
**ஸ்ரீராம பக்தர்களும் என்.டி.ஏ கூட்டணியும்.**

– கோடங்குடி மாரிமுத்து

# 1971-ல் பெரியார் சொன்னதை மனதில் வைப்போம்

## -மு.க.ஸ்டாலின்

*இங்கு கூடியிருக்கும் ஒவ்வொரு உடன்பிறப்பும், மக்களிடம் போகும் போது சொல்ல வேண்டியது என்ன? நடக்க இருக்கும் தேர்தல், தி.மு.க. vs NDA கிடையாது! தமிழ்நாடு வெர்சஸ் NDA! இன்னும் எளிமையாக சொல்ல வேண்டும் என்றால், வெல்லப் போவது, தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? என்பதுதான் 2026 தேர்தல்! இதில் நம்முடைய தமிழ்நாடு அணி வெற்றி பெற வேண்டும் என்றால், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தான் வெற்றி பெற வேண்டும்! உங்கள் வாக்குகளைத் தி.மு.க.வுக்கும் கூட்டணிக் கட்சிகளுக்கும் போடுங்கள் என்று கேளுங்கள்! இதுதான் நீங்கள் அடுத்த இரண்டு மாதத்திற்கு இடைவிடாமல் மக்களிடம் பரப்ப வேண்டிய மெசேஜ்!*

*இந்த நேரத்தில், தந்தை பெரியார் 1971 தேர்தலின்போது சொன்னதை, நினைத்துப் பார்க்கிறேன். “தி.மு.க. ஆட்சி தொடர்ந்தால்தான், தமிழ்ச்சமுதாயம் எதிர்பார்க்கும் முன்னேற்றம் ஏற்படும்” என்றார். இப்போதும் தந்தை பெரியார் சொன்னதை மனதில் வைத்து நம்முடைய பயணத்தைத் தொடர வேண்டும்!*

*இங்கே வந்ததும் என்னுடைய நினைவிற்கு வந்தது. 2021 தேர்தலுக்கு முன்பு, இதே திருச்சியில், இதே இடத்தில் ஏழு இலக்குகளை உறுதிமொழிகளாக நான் அறிவித்தேன். அதில் முதல் இலக்கு வளரும் வாய்ப்புகள், வளமான தமிழ்நாடு! இரண்டாவது இலக்கு மகசூல் பெருக்கம், மகிழும் விவசாயி! மூன்றாவது இலக்கு - குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்! நான்காவது இலக்கு - அனைவருக்கும் உயர்தரக் கல்வி - உயர்ந்த மருத்துவம்! ஐந்தாவது இலக்கு - எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்! ஆறாவது இலக்கு - உயர்தர ஊரகக் கட்டமைப்பு, உயர்ந்த வாழ்க்கைத் தரம்! ஏழாவது இலக்கு - அனைவருக்கும் அனைத்துமான தமிழ்நாடு!*

***கழக அரசை எதிரிகளும் பத்திரிகைகளும் பாராட்டுகிறார்கள்!***

*நெஞ்சை நிமிர்த்திச் சொல்கிறேன்! இந்த ஏழு இலக்குகளையும் நம்முடைய ஐந்தாண்டு ஆட்சியின் திட்டங்களால் நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்! அதனால்தான் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்! இதையெல்லாம், நம்முடைய எதிரிகளே, இன்றைக்கு மனதிற்குள் ஒப்புக்கொள்வார்கள். யாராலும் மறைக்க முடியாத, மறுக்க முடியாத உண்மை இது! தமிழ்நாட்டைத் தொடர்ந்து புறக்கணிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசுகூட, “நம்பர் ஒன் மாநிலம் - தமிழ்நாடு’ என்று சொல்கிறார்கள். உலக பத்திரிகைகளே, ‘சூப்பர் ஸ்டார் ஸ்டேட் தமிழ்நாடு’ என்று பாராட்டுகிறார்கள். அந்த அளவிற்கு நாம் கெத்தாக முன்னேறி இருக்கிறோம்!*

***- திருச்சி மாநாட்டில் முதல்வர் உரை***

# கழக ஏட்டுக்கு வளர்ச்சி நிதி

- *கழகத் தோழர் இரண்யா பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.2000 வழங்கியுள்ளார்.*
- *நெல்லை மாவட்டக் கழகம் சார்பில் பால்.பிரபாகரன் (பரப்புரைச் செயலாளர்) 25-பெரியார் முழக்க சந்தாவுக்கான ரூ.7500 வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார்.*
- *தோழர் சூரியகுமார் சேலம் மாவட்டம் சார்பாக ரூ.20400 பெரியார் முழக்க சந்தா தொகையயை வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார்.*

**நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.**

# பேறறிவாளன்-தீபா இணையேற்பு விழா

*திருவண்ணாமலை மாவட்டம் தமிழ்தாசன்- வல்லினத்தமிழ் ஆகிய இணையரின் மகன் பேரறிவாளன், கள்ளக்குறிச்சி மாவட்டம் செல்வம்- கோவிந்தம்மாள் ஆகிய இணையரின்மகள் தீபா ஆகிய இருவருக்கும் 09-02-2026 அன்று கழகத் தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார் முன்னிலையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் இணையேற்பு நடைபெற்றது.*



*"விடுதலைக் குரல்" தோழர்களின் பகுத்தறிவு பாடல் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. கழகத் தோழர்கள் ஆ.ஆசைத்தம்பி, க.இராமர், ந.வெற்றிவேல், க.மதியழகன், மு.நாகராஜ், ஏ.ஜெயப்பிரகாஷ், இரா.கார்மேகம், மா.குமார் ,சி. சாமிதுரை, தே.இராமச்சந்திரன், பெரியார் பாரதிதாசன்,செ. வே.ராஜேஷ், ச.கு.பெரியார் வெங்கட், விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ இளையரசன், த.பெ.தி.க மண்டலச் செயலாளர் செ.பிரபு (மக்கள் அதிகாரம் மாவட்டச் செயலாளர்) ஆ.இராமலிங்கம், ஆ.நாகராசன் (சி.அய்.டி.யு. தொழிற்சங்கம்)உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.*

**என்ன செய்யப் போகின்றாய்?**
பாராண்ட தமிழா – நீ
மான வீரனா சொல்வாய்? கேட்டேன்.
உனக்குனை அடிமைசெய் ஆரியரின்
கூட்டா?

முடிப்பு தில்லிக்கு அடிமையாய் நீயிருக்கத்
–தமிழரை
அடகு வைக்கத் துடிகின்றாய்!
தமிழினம் தலையெடுக்கா திருக்க – நீயே
கருவியாயிருக்கப் போகின்றாய்!

தமிழர் சூடிய மகுடத்தை – நீயே
வேதியர் வேள்வியில் வீசுகின்றாய் !
இமயம் வென்ற கூர்வேலை– ஆரிய
இழிந்தோர் காலடி வைக்கின்றாய்!

தமிழை அழிக்கும் பகையோடு – நீயே
துணையாய் இருக்கப் போகின்றாய்!
தமிழின உறவைக் கொல்ல – நீயே
ஆயுதம் வழங்கப் போகின்றாய்!

வேதிய மனுநீதி கோலோச்ச – நீயே
கைச்சாத் திடவே போகின்றாய்!
தில்லிக்கு அடங்கி அரசாளத் – தமிழர்
செல்வத்தைத் தாரைவார்க்கப் போகின்றாய்!

கொடிய சனாதனக் கூட்டத்தால் – தமிழர்
கெட்டழிந் திரக்கப் போகின்றார்!
கடைசியில் உன்னைப் பூட்டும் – சிறையில்
என்னச் செய்யப் போகின்றாய்?
–குயில்தாசன்

# தேர்தல் களம்; மக்களிடம் கூறுவோம்

## தமிழ்நாட்டு அரசியல் களங்களின் தொகுப்பு:

**எடப்பாடி ஆட்சியும் திமுக ஆட்சியும் ஓர் ஒப்பீடு**

★ கடந்த 2016-21, அ.தி.மு.க. ஆட்சியில், தொழில் முதலீட்டிற்காகப் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எவ்வளவு தெரியுமா? 471. இதுவே நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், ஆயிரத்து 190 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறோம்! கடந்த கால அ.திமு.க. ஆட்சியில் ஈர்த்த முதலீடு - நான்கு இலட்சத்து 13 ஆயிரத்து 414 கோடி ரூபாய்தான். ஆனால், நம்முடைய ஆட்சிக் காலத்தில், 12 இலட்சத்து 54 ஆயிரத்து 133 கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம்! மூன்று மடங்கு அதிகம்!

★ 2016-21-இல் அ.தி.மு.க. ஆட்சியில், புதிதாக நான்கே நான்கு சிப்காட் தொழிற்பூங்காக்களைதான் தொடங்கினார்கள். ஆனால், நாம் 33 புதிய சிப்காட் தொழிற்பூங்காக்களைத் தொடங்கி இருக்கிறோம்!

★ ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை எடுத்துக் கொண்டால், 2021 வரைக்-கும் இருந்த எண்ணிக்கை: 2 ஆயிரத்தி 45. இப்போது 13,500-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் நம்முடைய ஆட்சியில் இருக்-கிறது!

★ அடுத்து வேளாண் துறை, 2016-21-இல், 57.26 இலட்சம் ஹெக்டேராக இருந்த மொத்த சாகுபடிப் பரப்பை, இப்போது 62.32 லட்சம் ஹெக்டேராக உயர்த்தி இருக்கிறோம்! ஐந்து ஆண்டுகளில் 5 லட்சம் ஹெக்டேர் உயர்ந்திருக்கிறது.

★ கடந்த ஆட்சிக்காலத்தில் ஒரு இலட்சம் விவசாயிகளுக்குத் தான் இலவச வேளாண் மின் இணைப்பு கொடுத்தார்கள். ஆனால், நம்முடைய ஆட்சியில், இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளுக்கு இலவச வேளாண் மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம்.

★ 2016-21-இல், அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகை திட்டத்தில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? இரண்டே இரண்டு பேர்தான்! ஆனால், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் 386 மாணவர்களுக்கு, 160 கோடி ரூபாய் உதவித்தொகை கொடுத்து படிக்கிறார்கள்!

★ அதேபோன்று, ஆதிதிராவிட மகளிர் நன்னிலம் நில உடைமைத் திட்டத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் பயனடைந்த பெண்கள் 40 பேர்! 40 இலட்சம் ரூபாய் கொடுத்தார்கள்! அதுவே நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் 1,026 பெண்களுக்கு, சுமார் 50 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறோம்! எவ்வளவு பெரிய வித்தியாசம்?

★ அடுத்து, விளையாட்டில் நம்முடைய இளைஞர்கள் இன்றைக்கு எப்ப-டியெல்லாம் சாதிக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? விளையாட்டுத் துறைக்கு 800 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீட்டை, நம்முடைய ஆட்சியில், 2 ஆயிரத்து 268 கோடி ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம்!

★ அதுமட்டுமல்ல, 2016-21-இல் அரசு வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் எத்தனை பேர்? மூன்றே மூன்று பேர்தான்! ஆனால், நம்முடைய அரசில், 301 விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி இருக்கிறோம்! இப்படி எல்லா துறையிலும் லிஸ்ட் இருக்கிறது!

★ மக்கள் பெரும் சுமையாகக் கருதும் மருத்துவச் செலவுகள், சென்ற ஆட்சியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், 49 லட்சமாக இருந்த பயனாளிகள் எண்ணிக்கையை நம்முடைய ஆட்சியில் 90 இலட்சமாக உயர்த்தி இருக்கிறோம். அதற்குக் காரணம். நம்முடைய அரசில் 72 ஆயிரமாக இருந்த வருமான வரம்பை, ஒரு இலட்சத்து 20 ஆயிரமாக உயர்த்தி கொடுத்தோம்.

★ இப்படி எல்லாவற்றிலும் இரண்டு மடங்கு மூன்று மடங்கு, ஏன், பல மடங்கு சாதனைகள் படைத்திருக்கிறோம்! இதுதான் வளர்ச்சி! அதனால் தான்., வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 14 ஆண்டுகள் கழித்து, நம்முடைய ஆட்சியில் 11.19 விழுக்காடு பொருளாதார வளர்ச்சியை நம்முடைய மாநிலம் அடைந்திருக்கிறது! நானும் தொடர்ந்து ஒவ்வொரு மேடையிலும் நம்முடைய சாதனை களை எல்லாம் டேட்டாவுடன் சொல்லிக் கொண்டிருக்கிறேன். செய்ததைக் கூட, நம்மால் முழுதாகச் சொல்ல முடியவில்லை. அந்த அளவுக்கு மிகப்பெரிய பட்டியல் இருக்கிறது.

**- (மார்ச்-9-ல் திருச்சியில் நடந்த திமுக மாநாட்டில் எடப்பாடி ஆட்சியோடு தமிழ்நாடு அரசின் சாதனைகளை ஒப்பிட்டு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் ஆற்றிய உரை).**

## பீகார் வாரிசு அரசியல் கதை தெரியுமா?

பீகாரில் நிதிஷ்குமாரை முதலமைச்சர் ஆக்கிய பாஜக, இப்போது அவருடைய பதவியை பறித்துக் கொண்டு அவரது மகன் நித்திஷை துணை முதல்வர் ஆக்க முடிவு செய்துள்ளது. 50 வயது உள்ள நித்திஷ் பொது வாழ்க்கைக்கு தொடர்பே இல்லாதவர்.சொந்த தந்தையின் கட்சியிலே கூட அவர் உறுப்பினராக இல்லை; கடந்த ஞாயிற்றுக்கிழமை தான் அவர் உறுப்பினராக சேர்ந்திருக்கிறார். உடனே துணை முதலமைச்சர் பதவி 'லாட்டரி' கிடைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் வாரிசு அரசியலுக்கு எதிராக கொந்தளித்து வருகிறார் எடப்பாடி. இதற்குப் பிறகு வாரிசு அரசியலுக்கு எதிராக வாய் திறப்பாரா?



ஏற்கனவே எடப்பாடியாரின் கட்சியில் அடையாளமாக வைத்திருந்த பெரியார் படம்; மாநில உரிமைகள்; மென்மையான மதவாத எதிர்ப்பு என்று ஒவ்வொன்றாக பறித்து எடப்பாடி வாயை அடைத்து விட்டார் அமித் ஷா. இப்போது வாரிசு எதிர்ப்பு பேச்சுக்கும் கடிவாளம் வந்துவிட்டது. எடப்பாடி தக்க வைத்துக் கொண்டுள்ள ஒரே பேச்சுரிமை இதுதான். "எந்தக் கொம்பனாலும் எங்களை அசைக்க முடியாது" என்ற ஒற்றை டயலாக்கு தான்!

## கள்ள உறவும் கலாச்சார ஊழல்தான்

**உடையாத பாலத்தைக் கட்டித் தருவேன் என்று உறுதிகூறி அதற்கான பணத்தை வாங்கிக் கொண்டு விரைவில் உடைந்து நொறுங்கும் பாலத்தைக் கட்டி முடிப்பது 'நிதி ஊழல்'.**

**உடையாத வாழ்க்கையை உனக்கு தருவேன் என்று உறுதியளித்து இடையிலேயே வாழ்க்கையை உடைய வைத்து அந்த துயரத்தைக் கொண்டாடி கூத்தாடுவது 'குடும்ப கலாச்சார ஊழல்'**

**சினிமாவில் வரி கட்டுகிற பணம் ; வரி கட்டாத பணம் என்று பிரித்து வாங்கி; வரி ஊழல் செய்தவர்களும், குடும்ப கலாச்சார ஊழல் செய்தவர்களும் ஊழலை எதிர்க்க அரசியல் களம் இறங்கி இருக்கிறார்கள். கருப்புப் பண ஊழலை விட கொடுமையானது கள்ள உறவு கலாச்சார ஊழல்!**

-விடுதலை இராசேந்திரன்
முகநூல் பதிவு

## விளையாட்டு போட்டிகளின் தலைநகரம்

துணை முதலமைச்சர் உதயநிதி விளையாட்டுத் துறை அமைச்சராக வந்தபிறகு தமிழ்நாடு விளையாட்டுத் துறையின் தலைநகரமாக மாற்றப்பட்டுள்ளது. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு கண்டது. சர்வதேச விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகள் வெற்றிகளை குவித்து வருகிறார்கள். அதற்கு அவர்கள் தயார் செய்யப்படுகிறார்கள். வெற்றி குவித்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா? 6,689 பேருக்கு அரசு பரிசாக வழங்கிய தொகை 215.78 கோடி.

செம்மஞ்சேரியில் ரூ.261 கோடியில் உலகத் தரத்திலான விளையாட்டு நகரம் அமைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 234 தொகுதிகளிலும் ஒரு தொகுதிக்கு ஒரு சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது. அவற்றுள் இதுவரை 141 அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய அரங்கங்களின் கட்டுமான பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் வாழும் அனைத்து இளைஞர்களுக்கும் மகளிர்க்கும் அவர்கள் விரும்பும் விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கு ஏற்ப அனைத்து வகை விளையாட்டுகளுக்கும் தேவைப்படும் விளையாட்டுக் கருவிகள், எல்லா ஊர்களிலும் கிடைக்கச் செய்திட வேண்டும் என்பதற்காக, தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம் ஊராட்சிகளுக்கும், 12,831 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தியத் தொழில் நிறுவனங்கள் கூட்டமைப்பின் சார்பில் விளையாட்டுகளை ஊக்குவித்திடும் சிறந்த மாநிலம் என தமிழ்நாட்டை தேர்வு செய்து 2025 ஆம் ஆண்டிற்கான விருதினை வழங்கிப் பாராட்டியுள்ளது.

## கருப்பை புற்றுநோய் தடுப்பில் மோடிக்கு வழிகாட்டிய மு.க.ஸ்டாலின்!

பெண்களுக்கான கருப்பை புற்றுநோய் அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. இந்த ஆபத்தைத் தடுக்கும் முயற்சியில் இறங்கியது திராவிட மாடல் ஆட்சி. கடந்த சனவரியில் அரசு இத்திட்டத்தை அறிவித்து மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. ஒரு ஊசியின் மதிப்பு ரூ.14,000. தமிழ்நாட்டில் இலவசமாக போடப்படுகிறது. இதுவரை 4 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டமாக தொடரும்.தமிழ்நாடு அரசின் பெண்கள் உரிமைக் கான திட்டங்களை வாக்கு திரட்டும் திட்டமாக சிலர் கொச்சைப்படுத்துகிறார்கள். ஆனால் இந்த திட்டம் வாக்களிக்கும் வயதிற்கு வராத 14 வயது சிறுமிகளுக்கான திட்டம்.

தமிழ்நாட்டைப் பார்த்த பிறகு தான் மோடி கடந்த பிப்ரவரியில் இப்படி ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார். கடந்த பிப்ரவரி 28-ஆம் தேதி மோடி வெளியிட்ட ஒரு அறிவிப்பில் இந்தியா முழுவதும் 14 வயதான 1.5 கோடி பெண்களுக்கு கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி போடப்படும் என்று கூறியிருக்கிறார். உலகளாவிய புற்றுநோய் ஆய்வகம் 'Globocan' 2022-ல் வந்துள்ள தகவலின் படி இந்தியாவில் 35 முதல் 44 வயதுக்குட்பட்ட பெண்களிடம் காணப்படும் புற்றுநோய்களில் கருப்பை வாய் புற்றுநோய் 2-ம்இடத்தில் இருக்கிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் 1,20,000 பெண்கள் புதிதாக இந்த நோயால் பாதிக்கப்படுவதும், 80,000 பேர் உயிரிழப்பதும் தெரிய வந்திருக்கிறது. 'செர்வாக்' Cervavac என்ற தடுப்பூசி இதற்கு பயன்படுத்தப்படுகிறது. மோடி அரசு உலகளாவிய தடுப்பூசி கூட்டணி (CAVI) என்ற அமைப்புடன் இணைந்து இதற்காக ஒப்பந்தம் போட்டுள்ளது.

தமிழ்நாடு அரசோ ஒன்றிய அரசின் ஆய்வறிக்கை வந்த உடனேயே சுறுசுறுப்பாக களத்தில் இறங்கி உலக வங்கியிடம் ரூ.1,185 கோடி ரூபாய் கடன் பெற்று இத்திட்டத்தை தொடங்கிவிட்டது. தமிழ்நாட்டில் இத்திட்டம் 5-ஆண்டு காலம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் மோடி ஆட்சி சர்வதேச அமைப்புடன் உடன்படிக்கை செய்து கொண்டு நிறைவேற்றப்படும் இத்திட்டம் வெறும் 3 ஆண்டுகளுக்கு மட்டும் தான். தமிழ்நாடு அரசு உடனடியாக பெண்களுக்கு கவலையோடு திட்டங்களை என எப்படி அமல்படுத்துகிறது என்பதற்கு இது ஒரு மறுக்க முடியாத சான்று. தமிழ்நாட்டில் மட்டும் 2023-ம் ஆண்டில் 8,534 பெண்கள் இந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஒன்றிய அரசின் அறிக்கை கூறியது. தமிழ்நாடு அரசின் பெண்கள் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டம் 5-ஆண்டு காலம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் மோடி ஆட்சி சர்வதேச அமைப்புடன் உடன்படிக்கை செய்து கொண்டு நிறைவேற்றப்படும் இந்தத் திட்டம் வெறும் 3 ஆண்டுகளுக்கு மட்டும் தான். தமிழ்நாடு அரசு உடனடியாக பெண்களுக்கு கவலையோடு திட்டங்களை என எப்படி அமல்படுத்துகிறது என்பதற்கு இது ஒரு மறுக்க முடியாத சான்று.

கழகத் தலைவரின் தொடர் அடுத்த இதழில் வெளிவரும்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

★திருப்பூர்,சேலம்,கோவையில் ஒவ்வொரு நாளும் 4 கூட்டங்கள் ★கலைநிகழ்ச்சியுடன் சென்னை கூட்டங்கள்

# களம் இறங்கியது கழகத்தின் பரப்புரை படை!

**திருப்பூர், கோவை, சேலம், சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் தினமும் 2 முதல் 4 இடங்களில் மாவட்டத்தின் பல முக்கிய சாலைகளில் நாள் முழுவதும் தீவிர தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகிறார்கள். தலைமைக்குழு அறிவித்த சில நாட்களில் தோழர்கள் சுமார் 90-க்கும் மேற்பட்ட தெருமுனைக் கூட்டங்களில் திமுக ஆட்சியை ஆதரித்து பரப்புரை செய்து வருகிள்ளனர். தொய்வில்லாமல் தோழர்கள் கடும் வெயிலிலும் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். அதன் செய்தி தொகுப்பு.**

**திருப்பூர்:** மாவட்டக் கழகம் சார்பில் 5 நாட்கள் தினமும் 4 இடங்களில் தேர்தல் பரப்புரை கூட்டங்களை தோழர்கள் மாவட்டத்தின் மங்கலம் ரோடு, காங்கயம் ரோடு, பல்லடம் ரோடு என பல முக்கிய சாலைகளில் பரப்புரைக் கூட்டங்களை நடத்தியுள்ளனர். முதற்கட்டமாக 5 நாட்களில் 20 கூட்டங்களை நடத்தி முடித்துள்ளனர். தோழர்களின் இந்த பரப்புரையில் பேசிய கருத்துக்கள் மக்களிடத்தில் நல்ல வரவேற்பு பெற்றது. கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமையிலும் முகில் இராசு (மாவட்ட தலைவர்) முன்னிலையிலும் "தொடரட்டும் தமிழ்நாட்டின் சாதனைகள், திமுக அரசை உறுதி செய்வோம்" என்ற தலைப்பில் தெருமுனைக் கூட்டம் நடந்தது.

**28.02.2026 (2வது நாள்):** இடுவம்பாளையம், முருங்கம்பாளையம், தண்ணீர் பந்தல் (பல்லடம் சாலை), குப்பாண்டம்பாளையம் ஆகிய பகுதிகளிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன.

**02.03.2026 (3வது நாள்):** மங்கலம் பிரதான சாலையில் கே.வி.ஆர் நகர் (சென்னை பேக்கரி அருகில்), செல்லா நகர், ஆண்டிபாளையம், ஆண்டிபாளையம் பிரிவு ஆகிய பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. பரிமளராசன் (சமூக வலைதளப் பொறுப்பாளர்), முகில் இராசு (மாவட்டத் தலைவர்), முத்து (மாநகர அமைப்பாளர்), அய்யப்பன் (வடக்கு ஒன்றிய அமைப்பாளர்), அபத்ரா ஆனந்த் (திமுக-மாமன்ற உறுப்பினர்), சீனிவாசன் (திமுக,இடுவம்பாளையம் செயலாளர்) ஆனந்த் (மதிமுக பகுதி கழகச் செயலாளர்),தமிழ் அமுதன் (மார்க்சிய முற்போக்காளர் பேரவை), ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். கழகப் பொருளாளர் சு.துரைசாமி நிறைவுரையாற்றினார். இரா.சரசுவதி (மாநகர அமைப்பாளர்), மா. இராமசாமி (தெற்கு பகுதிச் செயலாளர்), இனியன், சிரிஜா ஆகியோர் நன்றி கூறினர். கழகத் தோழர்கள் மாரிமுத்து (மாநகர துணை அமைப்பாளர்), வீரபாண்டி கார்த்திக், மற்றும் செல்வகுமார் (மார்க்சிய பொதுவுடைமை கட்சி), எல்.அய்.சி கண்ணன், விஸ்வநாதன், முருங்கம்பாளையம் ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களுக்கு கழக வெளியீடுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

**சென்னை:** மாவட்டக் கழகம் சார்பில் தினமும் 2 கூட்டங்கள் என இது வரை 11 தெருமுனைக் கூட்டங்களை நடத்தியுள்ளனர். கலைநிகழ்ச்சிகள் பாடல்கள், நையாண்டி என பரப்புரைக்கென தனிப் பாடல்களை உருவாக்கி திமுக ஆட்சியை உறுதிசெய்வோம் என்ற முனைப்புடன் தோழர்கள் நடத்தி வருகிறார்கள். பொன்ராஜ், சத்யா, லதா கலைக் குழுவினர் இணைந்து இதற்கென தனி பிரச்சாரப் பாடல்களை உருவாக்கி அதை தனது பாணியில் பாடினார்கள். அருவி வலையொலி அனைத்து தெருமுனைக் கூட்டங்களையும் பதிவுசெய்து தனது வலையொலி பக்கத்தில் வெளியிட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் சமூக வலைதளத்தில் பார்த்து வருகின்றனர். திவிக சென்னை முகநூல் பக்கத்திலும் கூட்டங்கள் குறித்தான காணொலி வெளிவந்து சமூக வலைதளத்தில் பகிரப்படுகிறது. கழக வெளியீடுகளும் விற்பனை செய்யப்படுகிறது. தோழர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன் மற்றும் இரண்யா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

**மார்ச்-2:** திமுக ஆட்சியை உறுதி செய்வோம்! என்ற தலைப்பில் திருவல்லிக்கேணி பகுதி கழகம் சார்பில் தோழர்கள் கோபிநாத், ராஜேஷ், சூர்யா ஏற்பாட்டில் 02.03.2025 அன்று மாலை 6 மணிக்கு திருவல்லிக்கேணி பெரியார் படிப்பகத்தில் தொடங்கி சைவ முத்தையா தெரு உள்ளிட்ட 10 இடங்களில் வீதி வீதியாக திமுக ஆட்சியை ஆதரித்து பரப்புரை நடைபெற்றது. ஆர்.என் துரை (திமுக மாவட்டத் துணைச் செயலாளர்), கா.வே மோகன் (திமுக வட்டச் செயலாளர்), மாமன்ற உறுப்பினர் கமலா செழியன், பிரபு (வட்டச் செயலாளர்), மாவட்டத் தலைவர் வேழ வேந்தன், மாவட்டச் செயலாளர் உமாபதி, தோழர்கள் பிரகாஷ் மாஸ்டர், வீரா, இரண்யா, அருண், வடசென்னை ஏசு குமார், மாணிக்கம் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு துண்டறிக்கை பிரச்சாரத்தை செய்தனர். ஆட்சியின் சாதனைகளை தோழர்கள் ஒலிபெருக்கியில் சொல்லிக் கொண்டு நடந்து சென்றனர்.









**மார்ச்-3:** மாலை 5 மணிக்கு, சுரேந்தர் தலைமையில், குரோம்பேட்டை பேருந்து நிலையத்திலும், மாலை 7 மணிக்கு, தீபக் தலைமையில், பல்லாவரம் ரங்கநாத முதலி தெருவிலும், தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.
கழகத் தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், சீராளன் (புஇமு) ஆகியோர் உரையாற்றினர். இளைஞரணியினர் உருவாக்கிய பிரச்சார வாகனம், மக்களை வெகுவாகக் கவர்ந்தது.

CPI மாவட்டச் செயலாளர் கார்த்திக் கலந்து கொண்டார். குரோம்பேட்டை கூட்டத்திற்கான செலவினங்களை இம்சாம்(திமுக இளைஞரணி மாநகர துணை அமைப்பாளர்) ஏற்றுக்கொண்டார். தர்மராஜ் இரவு உணவை ஏற்பாடு செய்தார். தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), மா. வேழ வேந்தன் (மாவட்டத் தலைவர்), ப.அருண் (சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), சுகுமார், சு. கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), த.நா. சூர்யா (பகுதி அமைப்பாளர்), அஜித், குமார், புருஷோத், அப்பு, மாணிக்கம், அசோக், மயிலை அருண், வீரா கனிகா செல்வன், பிரீத்தி, புகழேந்தி, கிரிஸ்டோ, தினியா உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

**சேலம்:** மாவட்டக் கழகம் நங்கவள்ளி ஒன்றியத்தின் சார்பில் 01.03.2026 நாள் முழுவதும் வெள்ளார் நூலகம், மேச்சேரி பேருந்து நிலையம், ஓமலூர் பேருந்து நிலையம் ஆகிய 3 இடங்களில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிவசண்முகம் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), கிருஷ்ணன் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), பிரபாகரன் (சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்) ஆகியோர் தலைமை வகித்தனர். சக்திவேல் (சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர்), தங்கதுரை (மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), கவியரசு (தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர்), ஆகியோர் முன்னிலை வகித்தனர். நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன் வரவேற்புரை ஆற்றினார். தேவபிரகாஷ் (சேலம் மாவட்ட இளைஞர் அணித் தலைவர்), மோகன்ராஜ் (இளம்பிள்ளை நகரச் செயலாளர்), உமாசங்கர் (வனவாசி நகரச் செயலாளர்), பெரிய சோரகை ஆனந்த், புக்கம்பட்டி கணேசன் ஆகியோர் பரப்புரை கூட்டத்தின் நோக்கங்களை பொதுமக்களிடையே எடுத்துரைத்தனர். மேச்சேரி சபரி நன்றி கூறினார். வெள்ளார் (திமுக சேலம் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்), திரு.மா.கதிர்வேல் (முன்னாள் கவுன்சிலர் திமுக), எ.எம்.பழனிசாமி (வெள்ளார் ஊராட்சி ஒன்றியத் தலைவர்) சிறப்பு அழைப்பாளரக கலந்து கொண்டனர். நினைவு பரிசாக கழக வெளியீடுகளை தோழர்கள் வழங்கினர். மேட்டூர் முத்துராஜ், தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்கள் நாகராஜ், கவியரசு மற்றும் சிந்தாமணியூர் முருகேசன், மகிழினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோவை:-** முதற்கட்டமாக சூலூர் வீதிகளில் ஒலித்த கழகப் பரப்புரை. கழகத் தோழர்கள் நாள் முழுவதும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்தினர். மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

06.02.2026 அன்று காலை 10.00 மணிக்கு தொடங்கி இரவு 8மணி வரை கலங்கல் பேருந்து நிறுத்தம், சூலூர் புதிய பேருந்து நிலையம், குரும்பபாளையம் ரேசன்கடை மைதானம் மற்றும் நீலாம்பூர் அம்பேத்கர் நகர் குடியிருப்புப்பகுதி ஆகிய 4 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. கோவை மாவட்டக் கழகச் செயலாளர் சூலூர் இரா. பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். சூலூர் தமிழ்ச்செல்வி மற்றும் நீலாம்பூர் தங்கராசு ஆகியோர் கூட்டத்தை ஏற்பாடு செய்தனர். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, நிர்மல் குமார் (கோவை மாநகரத் தலைவர்), பரிமளராசன் (கழக சமூக வலைதளப் பொறுப்பாளர்), திருப்பூர் சங்கீதா (திருப்பூர் மாவட்ட அமைப்பாளர்), முத்து (மாநகர அமைப்பாளர்), அன்னூர் விஷ்ணு, மோகன கிருஷ்ணன், சிவராசு ஆகியோர் தி.மு.க. கூட்டணியை ஆதரிக்க வேண்டிய தேவையை பட்டியலிட்டு பேசினார்கள்.

கோவை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பசுமை நிழல் விஜயகுமார், சூலூர் பாவேந்தர் பேரவையை சார்ந்த ஆசிரியர் வேலுமயில் மற்றும் வரதராசன், தி.மு.க. சூலூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் அரசூர் அன்பரசன், துணைச் செயலாளர் சீனிவாசன், குரும்பபாளையம் கிளைச் செயலாளர் துரைச்சாமி, கிளை அவைத் தலைவர் செல்வராசு, ம.தி.மு.க. வடக்கு ஒன்றியச் செயலாளர் யுவராஜ், சூலூர் கிருஷ்ணசாமி, அம்பேத்கர் நகர் கிளைச் செயலாளர் ஜெயலட்சுமி துணைச் செயலாளர் நித்யா, தரணி, ராஜீ, சூலூர் ஒன்றிய செயலாளர் பொங்கலூர் கார்த்தி மற்றும் கழகத் தோழர்கள் திருப்பூர் முத்துலட்சுமி, சரஸ்வதி, அய்யப்பன் மற்றும் நவீந்தரகுமார், கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கலங்கல் பகுதியில் பெரியாரிய உணர்வாளர்கள் கார்த்திக் - கற்பகம் ஆகியோர் கலந்து கொண்ட தோழர்களுக்கு தேநீர் வழங்கினர். மதிய உணவை பசுமை நிழல் விஜயகுமார் வழங்கினார். மாலை குரும்பபாளையம் யுவராஜ் தேனீர் வழங்கினார். இரவு உணவை கழகத் தோழர் நீலாம்பூர் தங்கராசு ஏற்பாடு செய்தார்.

## என்.டி.ஏ தோல்வியை உறுதிசெய்வோம்!

## கள்ளக்குறிச்சியில் கழகத்தலைவர் கொளத்தூர் மணி உரை



**கள்ளக்குறிச்சி:** சங்கராபுரம் அருகில் உள்ள கடுவனூர் கிராமத்தில் 2005-ஆம் ஆண்டு நடந்த ஜாதிக் கலவர மோதலில் களமாடி சிறை சென்று 21 ஆண்டுகளாக விசாரணையில் இருந்து வந்த தோழர்கள் அ.சக்தி, ஆ.தங்கராசு, ஆ.சங்கர், மா.சங்கர் குரு, ச.கு.செயபால், ஆ.முனுசாமி, அ.பாலு, க.சங்குபாலகன், மா.குமார் உள்ளிட்ட தோழர்கள் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டதை பாராட்டியும், "தொடரட்டும் தமிழ்நாட்டின் சாதனைகள், தி.மு.க ஆட்சியை உறுதி செய்வோம்! மதவெறி கூட்டணியை விரட்டி அடிப்போம்! என்ற தலைப்பிலும் 07.03.2026 அன்று பொதுக் கூட்டம் நடைபெற்றது.

வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட தோழர்களுக்கு கழகத்தின் சார்பில் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. கூட்டத்திற்கு மா.குமார் தலைமை வகித்தார், மு.நாகராஜ் வரவேற்புரையாற்றினர். க.இராமர் (மாவட்டச் செயலாளர்), ந.அய்யனார் (தலைமைக் குழு உறுப்பினர்), செ.பிரபு (த.பெ.தி.க.கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர்) ஆகியயோர் கலவரம் மற்றும் வழக்கு குறித்து விரிவாகப் பேசினார்கள். க.மதியழகன் (மாவட்டத் தலைவர்), ந.வெற்றிவேல் (மாவட்டத் துணைச் செயலாளர்), பூ.ஆ.இளையரசன் (விழுப்புரம் மாவட்டத் தலைவர்), ஆ.இராமலிங்கம் (மக்கள் அதிகாரம்) ஆகிய தோழர்கள் தமிழக வளர்ச்சி குறித்தும் தி.மு.க வை ஏன் ஆதரிக்க வேண்டும் என்பது குறித்தும் பேசினார்கள்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தோழர்கள் விடுதலை குறித்து பாராட்டிப் பேசியதோடு தி.மு.க ஆட்சி சாதனைகளை விரிவாகப் விளக்கிப் பேசினார். வரக்கூடிய தேர்தலில் யார் வெற்றிபெறக் கூடாது என்பது தான் மிக முக்கியம். எனவே மதவாதக் கூட்டணியை விரட்டி அடித்து தி.மு.க தலைமையிலான கூட்டணிக் கட்சிகளை ஆதரிப்போம் என்று கூறி நிறைவுரையாற்றினார். பொதுக்கூட்டத்தில் கடுவனூர் ஊராட்சி மன்றத் தலைவர் அ.ஏழுமலை (தி.மு.க), கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகத் தோழர்கள் ஏ.பிரகாசு, சி.சாமிதுரை, மு.சங்கர், இரா. கார்மேகம், தே.இராமச்சந்திரன், மு.குமரேசன், வீ.முருகன், வ.பிரபு, சு.வல்லரசு கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் போதிசத்வா ஆகிய கழகத் தோழர்களும் தி.மு.க, வி.சி.க, ம.தி.மு.க கட்சியினரும், ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டனர். கு.பாபா நன்றியுரை நிகழ்த்தினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted :March 13, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran